தமிழ்நாடு பாதிக்கப்படுகிறது. லெவி ஷுகர் கொடுக்கின்ற முறையிலே மத்திய அரசாங்கத்தினுடைய ரூல்ஸ் எல்லாம் மிகவும் ரிஜிடாக இருக்கின்றன. வெளியே வாங்குவதற்கும் பல்க் கன்ஸ்யூமர்ஸ் கஷ்டப்படுகிறார்கள். சந்தர்ப்பம் ஏற்படுவதற்கில்லை. ஆகையினால் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்தி இங்கிருக்கிற மக்களுடைய அதிருப்தியை மத்திய அரசுக்கு இந்த அரசு அறிவிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசு உணவு அமைச்சரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு நம்முடைய சர்க்கரை ஆலைகளிலே ஏராளமாக உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தியை நமக்கென்று ஒதுக்கி நம்முடைய தமிழ் நாட்டு தேவைக்குக் கொடுத்து விட்டால் இந்தப் பிரச்னைகள் எல்லாம் வராது என்றும் அதே சமயத்திலே 70 சதவிகிதம் லெவி என்றும் கொடுத்து, இந்த லெவியை கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார். அந்தக் கிராமங் களிலுள்ள பல்க் கன்ஸ்யூமர்ஸ் ஹோட்டல், டீ கடைக்காரர்கள்தான். கிராமங் களிலும் நகரங்களிலும் அவர்களுக்கு சர்க்கரை வழங்குவதற்கு அனுமதி யில்லாத உத்தரவையும் போட்டுவிட்டு ஏழைகளுக்குக் குறைந்தவிலையில் கொடுக்கிறோம் என்ற உத்தரவையும் போட்டுவிட்டு, அதன் விளைவாக பல்க் கன்ஸ்யூமர்ஸ்ஸுக்குக் கொடுப்பதற்கு அதிகமான விலைக்கு வாங்கி, கள்ளச் சந்தையிலே விற்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக, பல்க் கன்ஸ்யூமர்ஸுக்குக் கொடுக்கின்ற முறையையும் கொண்டுவர வேண்டும்.

மத்திய அரசினுடைய கொள்கையிலே இன்னொரு குறை இருக்கிறது. ஆலை முதலாளிகளிடத்திலே 70 சதவிகிதம் வாங்குகிறார்கள். அதை மிகவும் குறைந்த விலையிலே வாங்குகிறார்கள். இதனால் ஆலை முதலாளிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதைச் சரிக்கட்டுவதற்காக ஆலை முதலாளிகளுக்கு ஒரு சலுகை. மீதி இருக்கிற 30 சதவிகிதத்தை என்ன விலைக்கு வேண்டு மானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று. பல்க் கன்ஸ்யூமர்ஸ் சொல்கின்ற விலை மிக அதிகமாக இருக்கிறது. நாம் கொடுப்பதாகத் திட்டமிட்டிருக்கிற 70 சதவிகிதத்தினுடைய விலை கட்டுப்படியாகாத விலையில் இருக்கிறது. அந்த இரண்டுக்கும் இடையில் இருக்கிற ஏற்றத்தாழ்வுதான் கள்ளச் சந்தைக்குக் காரணம். மத்திய அரசாங்கம் இதில் தன்னுடைய பிடிப்பை விட்டுவிட்டு மாநில அரசாங்கத்திடமே விட்டுவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசினர் அதைப் பரிசீலிப்பார் களா என்று தெரியவில்லை.

(பல உறுப்பினர்கள் கைகளை உயர்த்தினர்).

1973 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு விளக்கமாகப் பதில் அளித்துவிட்டாரே, இன்னும் துணைக் கேள்வி வேண்டுமா? (குறுக்கீடு).

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த லெவி சர்க்கரை பூராவும் கூட்டுறவு முறையிலே வினியோகிக்கப்படுமா? புகார் இருந்தால் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரை மாவட்டம் பெரியகுளம் தாசில்தார்மேல் பல ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன, எழுத்து மூலமாகவே வந்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அனேகமாக இப்பொழுது கொடுப்பதெல்லாம் கூட்டுறவுத் துறை மூலம் தான். ஏதாவது தவறு இருக்குமானால், அந்தக் கூட்டுறவு சங்கத்தில் தவறுகள் நடந்து இருக்கும். (குறுக்கீடு). அதைப்பற்றி விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. பெரியகுளம் தாசில்தார் பற்றிய விவரம் பிறகு சொல்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் என்று சொன்னதனால் விவரம் பிறகு சொல்கிறேன்.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் கூறியதை ஏன் திருப்பிச் சொல்லவேண்டும்.

திரு. ஏ. எம். ராஜா: நம்முடைய நாட்டியே நிறைய சர்க்கரை உற்பத்தியாகிறது. இருந்தாலும் கேட்கின்ற அளவு சர்க்கரையை மத்திய சர்க்கார் கொடுப்பதில்லை, அதைக் குறைத்தேதான் கொடுக்கின்றார்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி மேலும் கூறும் பொழுது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நேரிடையே கேள்வியைக் கேளுங்கள். மத்திய சர்க்காரைப் பற்றிக் கேட்கப் போகிறீர்கள். அதைக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் இப்பொழுது தானே பதில் சொன்னார். அதை நானே மறக்கவில்லை. ஆகவே, அதை மீண்டும் நினைவூட்ட வேண்டாம், கேள்வியைக் கேளுங்கள், நேரமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: நமக்குத் தேவை மிக அதிகமாக இருக்கிறது. நம்முடைய நாட்டிலே உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஆனால், நாம் சொல்வதை மத்திய அரசு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் அதே நேரத்தில் ஆந்திராவிலே அங்கே உற்பத்தியாகிற சர்க்கரையை நாங்கள் தான்